பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 03 புதன்கிழமை (18-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 22

# களுவாஞ்சிக்குடியில் நேற்று தற்கொலை குண்டுத் தாக்கு!

## அதிரடிப்படை உயர் அதிகாரி பலி

கொழும்பு, டிசம்பர் 18

மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவாஞ்சிக்குடியில், நேற்றுப் பிற்பகல் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் நடத்திய இந்தத் தாக்குதலில், விசேட அதிரடிப்படையின் பிரதிக்கட்டளை அதிகாரியான, சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரிண்டென்ட் உபாலி சஹபந்து பலியானார்.

களுவாஞ்சிக்குடி — கல்முனை வீதியில் நேற்றுப் பிற்பகல் 4-45 மணிக்கு நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில், தற்கொலைப் படை உறுப்பினர், மோட்டார் சைக்கிளில் குண்டுடன் வந்து பொலீஸ் சுப்பிரிண்டென்ட் பிரயாணம் செய்த ஜீப் மீது மோதினார்.

பொலீஸ் சுப்பிரிண்டென்ட் பயணம் செய்த ஜீப் வண்டி சுக்கு நூறாகியது; முற்றாகச் சேதமடைந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் ஆவணங்கள் சிக்கின!

சென்னை டிச. 18

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 450 கோடி ரூபாவுக்கு முதலீடுகள் செய்திருப்பதை வெளிப்படுத்தும் நூற்றுக்கும் அதிகமான ஆவணங்கள் போயர்ஸ் கார்டினில் உள்ள அவரது வீட்டில் நடத்தப்பட்ட சோதனைகளின் போது தமிழக காவல்துறையின் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

ஜெயலலிதாவுக்கு எதிரான 6 ஊழல் வழக்குகள் தொடர்பாக இன்னும் ஒரு சிலமாதங்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என அதிகார பூர்வ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஜெயலலிதா, சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் கூட்டாகவோ தனியாகவோ பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான முதலீடுகளை வெளிநாடுகளில் மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (இ-10)



## முச்சந்தி முரளி

தாண்டிக்குளத்தைத் தாண்டுவது தொடர்ந்து தாண்டவம் ஆடுகிற வேலையாய்த் தான் இருக்குமோ பின்னே...!

## காங்கேசன் வரும் கப்பல்கள்

திருகோணமலை, டிச. 18

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் மூன்று கப்பல்கள் நேற்று மாலை காங்கேசன் துறை நோக்கிப் புறப்படத் தயாரானதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(8ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் இராணுவ நடவடிக்கை மீண்டும் தொடர்வதாக அறிவிப்பு

கொழும்பு, டிச. 18

மட்டக்களப்பு மேற்குப் பகுதியில் படையினர் தமது நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் நேற்றுக் காலை கொக்கட்டிச் சோலையை அண்மித்து விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கும்புறுமுலையில் இருந்தும், வவுணத்தீவில் இருந்தும் புறப்பட்ட படையணிகள் முன்னேறி வருகின்றன என்றும் —

இந்தப்படையணிகள் புலிகளின் சிறு தளங்களையும் 4 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்ட நிசாம் தளத்தையும் முற்றாக அழித்துவிட்டன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அந்தத்தளத்தில் இருந்த தச்சு வேலைப் பகுதியில் பிரேதப் பெட்டிகள் செய்யப்பட்டிருந்தன எனப் படையினர் தெரிவித்தனர்.

கடைசியாகக் கிடைத்த தகவலின் படி படையினர் கொக்கட்டிச் சோலையில் மூன்று கிலோமீற்றர் தெற்கு நோக்கி முன்னேறியுள்ளனர் என்றும் —

தற்போது முறக்கொட்டாஞ்சேனையில் படையி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு குண்டுவீச்சில் நான்கு பொதுமக்கள் பலி!

கொழும்பு, டிச. 18

மட்டக்களப்பு பாவற்குடிச் சேனை விநாயகர் வித்தியாலயத்தின் மீது கடந்த புதன் கிழமை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் சிலர் காயமடைந்தனர் என்றும் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

படுவான்கரையை நோக்கிப் படையினர் மேற்கொண்ட ''பாடும்மீன்'' இராணுவநடவடிக்கையின் போது இத் தாக்குதல் நடந்துள்ளது.

இத்தாக்குதலின் போது பலவீடுகள் சேதம் அடைந்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் பெண் எனவும் காயமடைந்தவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ 3)

## தாண்டிக்குளம் ஊடாக மீண்டும் போக்குவரத்து

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக வடக்கே வருவதற்கு சில நாள்களாக விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த சனிக்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது.

தடை நீக்கப்பட்ட முதலாவது நாள் 50 லொறிகளில் வடக்கே உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

திங்கட்கிழமையும் பெருமளவு லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் குடாநாட்டில் ஓரளவு குறைந்தன

## மட்டக்களப்பு எம். பி. சொல்கிறார்

லண்டன், டிச. 18

யாழ்ப்பாணத்தில் இப்போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஓரளவு குறைந்திருப்பதாக —

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

சென்ற மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் காணாமற் போவது மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன ஓரளவு குறைந்துள்ளது என்பது உண்மையே. இதற்கு அங்கே தொடர்ந்து இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், காணாமற் போவது குறித்து நாங்கள் எடுத்துக் கூறியதே காரணமாகும் —

காணாமற்போவது, கைதுகள் ஆகியன யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில்தான் அதிகமாக இடம் பெற்றிருந்தன. எனவே எங்களது அழுத்தத்தின் காரணமாக, அரசுக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தி காரணமாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இவை தற்போது குறைந்திருக்கலாம் என நம்புகின்றேன் — என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் ஒரு வருடமாகியும் இன்னும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை. சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாடு குறைக்கப்பட்டால், மனித உரிமை மீறல்களைத் தவிர்க்கக்கூடிய [illegible] இதனாலேயே அங்கு உடனடியாக சிவில் நிர்வாகத்தை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நகர் ஹர்த்தாலால்ஸ்தம்பிதம்

திருகோணமலை, டிச. 18

திருகோணமலை நகரில் சந்தையில் கடை வைத்திருப்போர் நேற்று மேற்கொண்ட ஹர்த்தால் போராட்டத்தால் நகர் ஸ்தம்பிதம் அடைந்தது.

திருமலை நகரில் உள்ள சந்தையில் மீன், மரக்கறி, இறைச்சிக் கடைகளை நடத்துவதற்கான குத்தகையைப் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் ஐந்தரை லட்சம் ரூபாவுக்குப் பெற்றுள்ளார்.

கடந்த காலங்களில் குறைந்த விலையில் குத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புளுக்குனாவ முகாம் தாக்குதல்:

## சிப்பாய்களை விடுவிப்பதற்கு செஞ்சிலுவையுடன் தொடர்பு

கொழும்பு, டிச. 18

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான புளுக்குனாவ அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த குறைந்தது இரு போர்க் கைதிகளையாவது விடுவிக்க உதவி செய்யுமாறு இலங்கை அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை அணுகியுள்ளது என்று அந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புளுக்குனாவ முகாம் தாக்குதலின் பின் நிலைமையைத் தாம் அவதானிப்பதா

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்பானம் தயாரிப்பாளர் கவனத்திற்கு

எங்களிடம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட **சோடா மூடிகள்** கையிருப்பில் உள்ளன. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(3747)


## கண்ணீர் அஞ்சலி

**15 - 12 - 96** இல் அகாலமரணமடைந்த சேவையில் சிறந்த எமது தொண்டனும் உறுப்பினருமான

**செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி!

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ். கிளை.**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3750)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. சி. வ. வைத்திலிங்கம்**
**(இளைப்பாறிய கனிஷ்ட அதிபர்,**
**யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.)**

17-12-1996 இல் காலமான எங்கள் கல்லூரி இளைப்பாறிய கனிஷ்ட அதிபர்

**அமரர் சி. வ. வைத்திலிங்கம்**

அவர்களின் மறைவை யொட்டி துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்துகின்றோம்.

**அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,**
**ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.**

(சி/3751)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நாகரத்தினம்

வீமன்காமம் தெல்லிப்பளையைச்சேர்ந்த முருகேசு நாகரத்தினம் 15 - 12 - 96 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சரவணபவன் மற்றும் விமலாம்பிகை, சுகுணவதனி (லண்டன்), உஷாதேவி, அம்பிகை பாகன் (லண்டன்) சிறிகணேஸ் (ஆசிரியர், வயாவிளான் ம. ம. வி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 12 - 96 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சிறிகணேஸ் (மகன்)**

ஆலடி,
உடுவில்.

(44184)

### அம்பலவாணர் செந்தில்வடிவேல்

கட்டுடையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செந்தில் வடிவேல் 14-12-96 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-12-96 அன்று நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**வை. மயில்வாகனம்**
[ஒய்வுபெற்ற அதிபர்]
(மருமகன்)

சண்டிலிப்பாய்ச் சந்தி,
சண்டிலிப்பாய்.

(44189)

### இராஜேஸ்வரன் சரஸ்வதி

கரவெட்டி கிழக்கு பெரிய தோட்டத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் சரஸ்வதி காலமாகிவிட்டார்.

இவர் V.S. சுப்பிரமணியம் அவர்களது மகளும், இராஜேஸ்வரன் (N R) அவர்களது மனைவியும், வானதி (முன்னாள் லிகிதர் - கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), வாகீசன், வாசவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் 18-12-96 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ந.இராஜேஸ்வரன்.**
(கணவன்)

'பெரிய தோட்டம்'
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(சி/3749)

# இளைஞர் சயனைட்டுடன் உலாவும் துர்ப்பாக்கிய நிலை இந்த நாட்டில்!

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, டிச. 18

கல்வியறிவு, கடும்உழைப்பு, விவேகம் ஆகியவற்றில் உலகத்திலேயே தலை சிறந்த இளைஞர்களைக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் இளைஞர்கள் ''சயனைட்'' வில்லையுடன் உலாவும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் கடன் வழங்கும் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த வைபவத்தில் பேசுகையில் இப்படிக்கூறினார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

இளைஞர்களுக்கென சரியான மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தவறியமையாலேயே தவறான பாதையில் அவர்கள் செல்ல நேரிட்டது.

இந்த நிலையை மாற்றியமைக்க அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உலகிலேயே இளைஞர்கள் ''சயனைட்'' வில்லையுடன் உலாவும் துர்ப்பாக்கிய நிலையும் எமது நாட்டிலேயே காணப்படுகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் யுத்தம் ஏதும் நடைபெறவில்லை. ஆயுதத்தை வாங்கி அதனைப் பிரபாகரனுக்கு வழங்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டது.

அப்படியிருந்தும் அப்போது வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை 10 வீதமாகக் காணப்பட்டது. ஆனால் நாம் உண்மையிலேயே போரை நடத்திக் கொண்டு அதனை எட்டுச் சதவீதமாகக் குறைத்துள்ளோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

## இறந்த பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். ஆஸ்பத்திரியில் நீண்ட நாள்களாக வார்ட்டில் இருந்து சிகிச்சை பெற்றுவந்த வயோதிபப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானார்.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட இவர் ஒரு நீரிழிவு நோயாளி ஆவார்.

எஸ். பாக்கியலட்சுமி [வயது 75] என்ற இப்பெண்ணின் சடலம் உறவினரின் வருகைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரினால் கொடுக்கப்பட்ட விலாசம் தெளிவற்றுக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-10]

## மரக்கறி விலை அதிகரிப்பு

தென்மராட்சி, டிச. 18

தென்மராட்சிப் பகுதியில் மரக்கறி பயிர்வகைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் சந்தைகளில் மரக்கறி விலை திடீரென உயர்ந்துள்ளது—

கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி சந்தையில் கத்தரிக்காய் கிலோ 140 ரூபாவாகவும், பயிற்றங்காய், கிலோ 100 ரூபாவாகவும் பச்சைமிளகாய் கிலோ 40 ரூபாவாகவும் விற்கப்பட்டன. ஏனைய மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

ஆனால் மரவள்ளிக்கிழங்கு சந்தையில் கூடுதலாக விற்பனைக்கு வந்துள்ளது.

தாழ்ந்த நிலங்களில் மரவள்ளியை வெள்ளம் மூடி நிற்பதே இதற்குக் காரணமாகும். (இ-31-117)

## வேம்படி மகளிர் கல்லூரி மாணவியருக்கு

யாழ்ப்பாணம், டிச. 18

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சையில் தோற்றும் வேம்படி மகளிர் கல்லூரி 9 ஆம் ஆண்டு மாணவிகளை எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)


**NEW SCIENCE ACADEMY**
NALLUR

**கணக்கியல்**
**திரு. பாலவாசன்**
**பிரிவு II**
**ஒற்றைப்பதிவு**
ஆரம்பம்: 19-12-1996
முற்பகல் 6-15 மணி

(44195)


## நள்ளிரவு துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானவர் திங்களன்று மரணம்

### சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், டிச. 18

சுமார் 45 வயது மதிக்கத்தக்க இனம் தெரியாத ஒருவரின் சடலம் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 12.25 மணியளவில் யாழ். நகர மின்சார நிலைய வீதியால் படையினரின் காவலரண் நோக்கிச் சென்ற சமயம் இவர் படையினரின் சூட்டுக்குப் பலியானார் என்றுபொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் அவரது சடலம் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

45 வயது மதிக்கத்தக்க இவர் பொதுநிறமுடையவர்.

இடதுபக்க கையில் பண்டேஜ் கட்டப்பட்டுள்ளது. உடுப்பு எதுவும்இன்றிச் சாரத்தைக் கையில்வைத்திருந்தார் என்று யாழ். பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

## அதிரடிப்படை சேவையில்

மட்டக்களப்பு பட்டிருப்புப் பாலத்தில் பணியாற்றிய பொலீஸார் அகற்றப்பட்டு அவர்களுக்குப் பதிலாக விசேட அதிரடிப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### தேவசகாயம் மரியம்மா

வசாவிளான் 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவசகாயம் மரியம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனி தேவசகாயத்தின் அன்புமனைவியும், ஆனந்தம், காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் பரமநாயகம், செல்வநாயகம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), சகாயநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், வரப்பிரகாசம், யஸ்தஸ் சின்னப்பு (திரவியம் புடைவை வியாபாரி), ஞானபுஸ்பம், மரியகொறட்டி ஆகியோரின் அன்பு மாமியாரும், லீனஸ், லிபிந்தா, லையினஸ், ரோனால்யஸ்மின், ஆன்மேரியஸ்மின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவரின் பூதவுடல் இன்று (18-12-96) பி. ப. 2 மணிக்கு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**தே. செல்வநாயகம்**
(மகன்)

111, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்,

(44192)

### சி. வ. வைத்திலிங்கம்

[முன்னாள் கனிஷ்ட அதிபர், டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி,
முன்னாள் தலைவர், தென்மராட்சி ப. நோ. கூ. சங்கம்]

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், நுணாவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சி. வ. வைத்திலிங்கம் அவர்கள் 17 - 12 - 96 செவ்வாய்க்கிழமை மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன் (18-12-96) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கண்ணாடிப்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி தி. வைத்திலிங்கம்**
[மனைவி]
**வை. துரைசிங்கம்**
[மகன்]

'கிருபாபதி'
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[44190]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சோமாலியாவில் மீண்டும் குழுக்களிடையே சண்டை

மொகடிஸு, டிச. 18

சோமாலியாவின் தலைநகரான மொகடிஸுவில் மீண்டும் சண்டைகள் ஆரம்பித்துள்ளன.

நகரத்தின் மீது பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் மக்கள் பெருமளவில் நகரை விட்டு வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த சண்டைகளில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பெல்கிரேட்டில் மக்கள் ஆர்ப்பாட்டம் உச்சக் கட்டம்

பெல்கிரேட், டிச. 18

பெல்கிரேட்டின் மக்கள் தொகையில் 10 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் கடந்த ஞாயிறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மிலோ ஸெவிக்கின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பெல்கிரேட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களைப் பின்போட்டமையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கடந்த 28 நாள்களாக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் உச்சக்கட்டமாக ஞாயிறு இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது.

மாணவர்சள் பெரும் எண்ணிக்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

'நாங்கள் சலுகைகள் கேட்கவில்லை. எமது உரிமையைத் தாருங்கள்' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

## ரஷ்யாவில் ஜனநாயக சக்திகளை இணைக்க கோர்பச்சேவ் முயற்சி

ரஷ்யாவில் நாடாளுமன்ற ஜனநாயக சக்திகளை ஒருங்கிணைக்க முன்னாள் அதிபர் கோர்பச்சேவ் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் ரஷ்ய அதிபர் யெல்ட்ஸினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அலெக்சாண்டர் லெபெக்குடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்திவருவதாக தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கோர்பச்சேவ் தெரிவித்தார். (இ-10)

## தம்மீது வழக்குத்தொடர முடியாது என்கிறார் நரசிம்மராவ்!

புதுடில்லி, டிச. 18

ஜார்கன்ட் முக்தி மோட்சா எம்.பிக்களுக்கு லஞ்சம் ளழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட விவகாரத்தில் தம்மீது எத்தகைய வழக்கையும் நீதிமன்றத்தில் தொடரமுடியாது என முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் நரசிம்மராவின் பிணை அனுமதி தொடர்பான விசாரணைகள் டில்லி உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

நரசிம்மராவின் வழக்கறிஞர் ஆர்.கே. ஆனந் வாதிடுகையில் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் செயல்படும் விதம் குறித்தும் — அதன் விளைவுகள் குறித்தும் — நீதிமன்றங்கள் கேள்வி எழுப்ப முடியாது. இது தொடர்பாக உறுப்பினர்களுக்கு அரசியல் சாசனத்தில் தனிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். (இ-10)

## சதாம்ஹுசேய்ன் மகன் நிலை கவலைக்கிடம்

தெஹ்ரான், டிச. 18

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னின் மகனின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஈராக் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் காரில் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இவர் இலக்கானார்.

இந்தத் தாக்குதலை தாங்களே நடத்தியதாக ஈராக் எதிர்க்கட்சி ஒன்று உரிமை கோரியுள்ளது. (இ-10)

# உலக அரங்கில்

## சிங்கப்பூர் நாடாளுமன்றம் கலைப்பு

சிங்கப்பூர், டிச. 18

சிங்கப்பூர் நாடாளுமன்றம் கடந்த திங்களன்று கலைக்கப்பட்டது.

பொதுத் தேர்தல்கள் ஜனவரி 2 ஆம் திகதி நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய பிரதமர் கோச்சொதோல் மீண்டும் அமோக ஆதரவோடு ஆட்சியைக் கைப்பற்றுவார் என நம்பப்படுகிறது. (இ-10)

## முன்னாள் ஜனாதிபதிக்கு தண்டனை குறைக்கப்பட்டது

1979 ஆம் ஆண்டு தென் கொரியாவில் இடம்பெற்ற புரட்சிச் சதி தொடர்பாகவும்—

ஊர்வலத்தில் சென்ற பொதுமக்களைக் கொலை செய்தது தொடர்பாகவும் முன்னாள் தென்கொரிய ஜனாதிபதி சுன்டு குவானுக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து தென் கொரிய உயர் நீதிமன்றத்திற்கு சுன்டு குவான் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன்முறையீட்டை விசாரித்த உயர் நீதிமன்றம் சுன்டு குவானுக்கு மரண தண்டனையை ரத்துச் செய்து அதற்குப் பதிலாக ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்துள்ளது. [இ-10]

## அரசியலிலிருந்து ஜெயலலிதாவை விலகக் கேட்கிறார் சோமசுந்தரம்

சென்னை, டிச. 18.

இப்போதைய நெருக்கடியிலிருந்து அ.தி.மு.க. மீளவேண்டுமானால் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அரசியலில் இருந்து விலக வேண்டும்.

இப்படி போட்டி அ.தி.மு.க. தலைவரும், முன்னாள் அமைச்சருமான எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்தார்.

ஜெயலலிதாவை எதிர்க்கும் அனைவரும் தனது கட்சிக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புவதாகவும் அவர் கூறினார். (இ-10)

## எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் பர்மாவில் தொடர்ந்து கைது

ரங்கூன், டிச. 18

பர்மாவின் எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 8 அங்கத்தவர்கள் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவாரங்களுக்கு முன்னர் மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்கனவே தேசிய ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் 40 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ரங்கூன் நகர் வீதிகளில் இராணுவ கவசவாகனங்களில் படையினர் ரோந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பர்மா மாணவர்கள் தங்கள் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும், எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகியின் தலைமையில் இயங்கும் தேசிய ஜனநாயகக் கட்சியுடன் தமக்கு தொடர்பு இல்லை எனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (இ- 10)

## திரேஸாவுக்கு மின் அதிர்ச்சி வைத்தியம்

கல்கத்தா, டிச. 18

அன்னை திரேஸாவின் சீரற்ற இதயத் துடிப்பினைச் சரிசெய்ய கடந்த திங்கள் அவருக்கு மீண்டும் மின் அதிர்ச்சி வைத்தியம் செய்யப்பட்டது.

சமீப நாள்களாக மருத்துவர்களுடன் அன்னை திரேஸா சரிவர ஒத்துழைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## கருணாநிதியை டக்ளஸ் சந்தித்தார்

சென்னை, டிச18

இம்மாத ஆரம்பத்தில் இந்தியா சென்றிருந்த ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் இலங்கை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள் எப்போது யாழ்ப்பாணம் வரும்?

## பாதுகாப்பு அமைச்சு இன்னும் அனுமதி இல்லை

கொழும்பு, டிச. 18

தமிழ் அரசியற் கட்சிகள் யாழ். மாவட்டத்துக்கு வந்து தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பச்சைக்கொடியை பாதுகாப்பு அமைச்சு இன்னமும் காட்டவில்லை.

ஆனால் ஜனாதிபதி அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் இங்கு வருவதாக இருந்தால், எமது பாதுகாப்புக்காக ஆயுதங்களைக் கொண்டு செல்வோம் என்று புளொட் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புளொட்,ஈ.பி.டி.பி. ஆகிய இரு இயக்கங்களும் யாழ்ப்பாணம் வந்து அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளன.

ஈ. பி. ஆர். எல்.எவ். இயக்கத்தின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், ''யாழ்ப்பாணத்தில் அரசியல் நடத்த ஆவலாக இருக்கின்றோம். ஆனால் அங்கு செல்வது குறித்து எமது கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை'' என்றார். (இ- 3)

## பாடும்மீன் நடவடிக்கை முடிந்தாலும் பழைய இடங்களுக்கு இன்னும் படையினர் திரும்பவில்லை

கொழும்பு, டிச. 18

மட்டக்களப்பு மேற்குப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப்படையினர் மேற்கொண்ட 'பாடும் மீன்' இராணுவ நடவடிக்கையானது ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த போதிலும் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் தமது பழைய இடங்களுக்கு இன்னும் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரம் — மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் நுழைவாயில்கள் ஊடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

''புளுக்குனாவ இராணுவ முகாம் தாக்குதலில் ஈடுபட்ட புலிகள் உன்னிச்சை, வவுணதீவுப் பகுதியில் உள்ளனர் என்றும் —

அவர்களை வெளியே கொண்டுவந்து பலவீனப்படுத்தவே இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்றும் — இராணுவத் தளபதி றோகான் தலுவத்த தெரிவித்தார். (இ-3-150)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 18

''அனர்த்தங்களின் மத்தியில் வாழ்வின் அர்த்தத்தைத் தேடி'' என்ற உளவியல் கருத்தரங்கு இன்று புதன் கிழமை பிற்பகல் 2-30 மணிக்குயாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். [illegible] உரையாற்றுவார். (இ)

## திருமலை துறைமுக பாதுகாப்பை படையினர் பலப்படுத்தினர்

திருகோணமலை, டிச. 18

விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதல் நடத்தலாம் என்ற புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்து திருகோணமலைத் துறைமுகப் பகுதி பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடற்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலைநகர் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு கூடுதலான படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை — திருமலை நகரில் நிரந்தரமாகத் தங்கியுள்ளவர்களுக்கு குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினர் புதிய அடையாள அட்டைகளை வருட முடிவுக்குள் சகலருக்கும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-3-150)

## அமைச்சர்களை நேரடியாகத் தெரிவு செய்யும் முறை வேண்டும்

### பிக்கு முன்னணி ஆலோசனை

கொழும்பு, டிச. 18

அரசமைப்பில் சீர்திருத்தம் செய்யும் போது அமைச்சர்களை நேரடியாகத் தெரிவு செய்யும் வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

தேசிய பிக்கு முன்னணி மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தேசிய பிக்கு முன்னணி என்னும் அமைப்பு அரசமைப்பு சீர்திருத்தங்கள் குறித்து சில யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

மற்றும் சில யோசனைகள் வருமாறு:-

★ கட்சி உறுப்பினர்கள் ஜனநாயகத்தைப் பேணும் வகையில் கட்சிகளின் யாப்புக்கள் இருக்க வேண்டும். ஜனநாயக விரோத நடவடிக்கையில் ஈடுபடும் கட்சி உறுப்பினர்களின் எம்.பி. பதவியை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

★ தேர்தல் ஆணையாளருக்குப் பதிலாக சுயேச்சை அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

★ தற்போதுள்ள தேர்தல் தொகுதி எல்லைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

★ அரச நிறுவனங்கள்தனியார்மயப்படுத் தபடுவதை நிறுத்தவேண்டும். (இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஒரு பகிரங்க மடல்

அன்புள்ளங்களே!

## தமிழ் எழுத்து வடிவங்களின் எண்ணிக்கையை குறைக்கும் எழுத்துச் சீர்திருத்தம்

எமது தாய் மொழியில் காலத்துக்குக் காலம் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட்டு வருவது நாமனைவரும் அறிந்ததே.

இவ்வகையில் அறநெறிப் பணியில் ஈடுபட்டிருக்கும் எமக்குத் திடீரென உதித்த இந்த எழுத்து வடிவக் குறைப்பு முறையை (சீர்திருத்தத்தை) தங்கள் அனைவரினதும் சிந்தனைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| தமிழ் மொழி எழுத்துக்கள் | :- | 246 + 1 = 247 |
| அவற்றில் உயிர் எழுத்துக்கள் | :- | 12 |
| மெய் எழுத்துக்கள் | :- | 18 |
| உயிர், மெய் எழுத்துக்கள் | :- | 12 × 18 = 216 |
| ஆயுத எழுத்து (ஃ) | :- | 01 |
| ஆக மொத்தம் | = | 247 |

இந்த **247** எழுத்துக்களையும் எழுதுவதற்கு தற்போது **124 + 1 = 125** எழுத்து வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன் விவரம்:-

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்து வடிவங்கள் | = | 12 |
| ஆயுத எழுத்து வடிவம் | = | 01 |
| மெய் எழுத்து வடிவங்கள் | = | 18 |
| உயிர் மெய் எழுத்து வடிவங்கள் (ா, ெ, ே, ை உட்பட) | = | 94 |
| ஆக தற்போதுள்ள மொத்த எழுத்து வடிவங்கள் | = | 125 |

இந்த 247 எழுத்துக்களையும் 39 + 1 = 40 எழுத்து வடிவங்கள் மூலம் எழுதக் கூடிய புதிய முறையை — எழுத்துச் சீர்திருத்தத்தை — அறிமுகப்படுத்துவதன் மூலம் தமிழில் 85 எழுத்து வடிவங்களைக் குறைக்கும் (இல்லாமல் செய்யும்) புதிய திட்டம் ஒன்றை உங்கள் முன்வைக்கின்றோம்.

இந்தச் சீர்திருத்தம் மூலம் சிறுவர்கள் தமிழை குறைந்த காலத்தில் கற்க முடியும்; நவீன தொழில் நுட்ப விருத்தி — வளர்ச்சிக்கும் தட்டச்சு, கணனி, நவீன அச்சக முறை ஆகியவற்றுக்கும் இலகுவாக — இயல்பாக — பொருந்தக் கூடியதாக தமிழ் வளம் பெறும்; மொத்தத்தில் தமிழ் மொழி மேன்மை பெற வாய்ப்புண்டு என்பது எமது பணிவான கருத்து.

## 85 எழுத்து வடிவங்களை குறைக்கும் புதிய எழுத்து வடிவங்கள்




மேற்படி எழுத்து வடிவக் குறைப்பு முறையை தனிப்பட்ட முறையில் சீர்தூக்கிப் பார்த்து உலகில் நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பை இந்த அறிவித்தல் மூலமாக தங்கள் ஒவ்வொருவரது கரங்களிலும் ஒப்படைக்கிறோம். குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு இவ்விடயத்தைச் சமர்ப்பிக்கிறோம்.

நன்றி.

ஒப்பம்:

**ஆ. சி. முருகுப்பிள்ளை,**
நிறுவுநர்,
**விநாயகர் தரும நிதியம்,**
**வியாபாரிமூலை.**

(சி/3744)

# ஐ.தே.கட்சி வசமுள்ள சபைகளை கைப்பற்ற பொ.ஐ.முன்னணி முயற்சி

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் போட்டிக்குழு உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று ஐ.தே.கவின் ஆட்சியில் உள்ள மத்திய, சப்ரகமுவ, வடமேல் மாகாண சபைகளின் ஆட்சியைக் கைப்பற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது.

இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய முன்னணி (லலித் பிரிவு) யில் இருந்து பிரிந்து சென்றுள்ள போட்டிக் குழுவினருக்கு மத்திய, சப்ரகமுவ, வட-மேல் மாகாண சபைகளில் கணிசமான உறுப்பினர்கள் உள்ளனர்.

அந்த உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்துள்ளதால் அவர்களைத் தம்முடன் சேர்த்து இந்த மாகாண சபைகளைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவர அரசு முயற்சி எடுத்துள்ளது.

அரசின் இந்த முயற்சியைத் தடுக்கும் நோக்கில் அந்த மாகாணசபைகளைக் கலைக்க ஐ.தே.க. முயற்சி எடுத்துள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

(இ-3-150)

மாதகல்

**புனித தோமையார் வருடாந்த உற்சவ விழா**

**21-12-96** சனிக்கிழமை காலை **7-30** மணிக்கு
**வண. பிதா அருட்தந்தை யஸ்ரின்**
அடிகளாரால்
திருநாள் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

-- பங்கு மக்கள்.

(9084)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க முன்னாள் கிளை முகாமையாளராகவும், தொழிற்சங்கத் தலைவராகவும் சேவையாற்றிய

**அமரர் V. S. குணசிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,**
**யாழ். பட்டணக் கிளை.**

(44185)

விண்ணக பிறப்பின்

**நினைவஞ்சலி**
**முதலாம் வருடம்**

மலர்வு: 01 — 07 — 1936



உதிர்வு: 19 — 12 — 1995

**அமரர் அ. சி. மரியரட்ணம்**
(பலாலி)
(முன்னாள் மறையாசிரியர், காலி மறை மாவட்டம்)

''ஆண்டவருக்குள் மரிப்போர் பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள் தம்உழைப்பினின்று இளைப்பாறுவர்''

இறைவனுடன் சங்கமமாகிவிட்ட இவரது ஆன்ம சாந்திக்காக 19-12-1996 (நாளை) வியாழன் காலை 6-00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கற் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறும் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றுமாறும் உற்றார், உறவினர், சகோதரர், நண்பர்கள், பங்கு மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,
**திருமதி ம. செ. மரியரட்ணம்**
(ஆசிரியை, நாவலர் பாடசாலை, கோப்பாய்)
**பிள்ளைகள்.**

69, சீனிவாசம் றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(44183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைத் தடை செய்யும் கோரிக்கை உலக நாடுகள் மத்தியில் எடுபடவில்லை

'ஏசியா வீக்' மற்றும் 'மக்லீன்ஸ்' சஞ்சிகைகளில் வெளியான ஆய்வுக் கட்டுரைகளைத் தொடர்ந்து கொழும்புப் பத்திரிகைகள் விடுதலைப்புலிகள்அமைப்பை உறுதியான விதத்தில் சட்டரீதியாகத் தடை செய்ய வேண்டும் எனக் குரலெழுப்பின.

ஏசியா வீக் சஞ்சிகையில் ''விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்புகள்'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று பிரசுரமானது.

அக்கட்டுரையில் விடுதலைப் புலிகள் ஆசியா ஊடாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் விவரங்களும் —

மேற்குலக நாடுகளில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களிடமிருந்து வரி மூலமாக விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மாதமொன்றுக்கு 20 இலட்சம் ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ் கிடைப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்லீன்ஸ் சஞ்சிகை கனடாவிலுள்ள 12 ஆயிரம் தமிழ் அகதிகள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்குள்ள செல்வாக்கை துலாம்பரப்படுத்தியதுடன் குறைந்தது 10 ஆயிரம் விடுதலைப்புலிகள் ஆவது அகதிகள் என்ற போர்வையில் கனடாவுக்குள் நுழைந்துள்ளனர் எனத் தெரிவித்தது.

சட்ட விரோத போதைவஸ்துகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியனவற்றுடன் விடுதலைப்புலிகளைத் தொடர்புபடுத்தி அச் சஞ்சிகை ஆராய்ந்தது.

தனியாருக்குச் சொந்தமான, அரசு எதிர்ப்புப் பத்திரிகைகள் எனக் கருதப்பட்ட ஸ்ரீலங்கா பத்திரிகைகள் பல மேற்குறிப்பிட்ட சஞ்சிகையில் வெளியான கட்டுரைகளை உடனுக்குடன் மறுபிரசுரஞ் செய்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சட்டரீதியாகத் தடை செய்யுமாறு அல்லது அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுக்குள் கொண்டு வருமாறு கடந்த சில மாதங்களாக ஸ்ரீலங்கா அரசு குறிப்பாக மேற்குலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து வந்துள்ளது.

பிரான்ஸில் உள்ள லியோன்ஸ் நகரில் கடந்த ஜூலை மாதம் ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்னும் விடயம் தொடர்பாக வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களின் உச்சி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மேற்குலக நாடுகள் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக உன்னிப்பாகப் பரிசீலிக்கும் என ஸ்ரீலங்கா அரசு நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அந்த உச்சி மாநாட்டில் குறிப்பிடப்படும்படியாக எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்படாதிருக்கையில் அந்த அமைப்பை வெளிநாடுகள் தடை செய்ய வேண்டும் என எவ்வாறு எதிர்பார்க்கலாம் எனச் சிலர் வாதிட்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்வது தொடர்பாக ஆதரவு திரட்டும் முயற்சியில் தொடர்பு சாதனங்கள் முழுமூச்சில் இறங்கின.

பத்திரிகை எழுத்தாளரான சஹபந்து என்பவர் சண்டே ஐலண்ட் பத்திரிகையில் சமீபத்தில் பின்வருமாறு கூறியிருந்தார். ''அற்பமான விடயங்களுக்கெல்லாம் எதிர்க்கட்சிகள் மீது குறைகாணும் அரசாங்கம், விடுதலைப் புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்பொன்றைத் தடை செய்யாமல் இருப்பது ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது.

''விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதற்கு இன்னும் எத்தனை குண்டுகள் கொழும்பில் வெடிக்க வேண்டும், இன்னும் எத்தனை பேர் கொல்லப்பட வேண்டும் என ஒருவர் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

''விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்கிப் போஷித்துவந்த இந்தியாவுக்கு முன்னைநாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு எனக் கூறித் தடைசெய்வதற்குக் காரணமாக அமைந்தது. ஆனால் ஸ்ரீலங்காவில் எத்தனையோ தலைவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயங்கரவாதத்துக்கு இரையான பின்பும் அந்த அமைப்பு இதுவரை தடை செய்யப்படாதிருப்பதைப் புரிந்துகொள்ள முடியாமலுள்ளது'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தடை செய்வதால் பிரச்சினை தீருமா?

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது தொடர்பாக தொடர்பு சாதனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆதரவுதேடும் முயற்சியானது அரசாங்க வட்டாரத்திலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகளை எதிர்க்கும் தமிழ் அரசியற்கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டறியவும் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது தொடர்பாக அமைச்சரவை கலந்தாலோசிக்கும் அளவுக்கு அந்தத் தாக்கம் அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதால் அது அந்த அமைப்பின் செயற்பாடுகளில் எதுவித தாக்கங்களையும் ஏற்படுத்தாது என்பது அரசுக்குள்ளேயே ஒரு சாராரின் நிலைப்பாடாகும்.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டால் அது வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு அவர்களது நாடுகளில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தூண்டுகோலாக அமையும் என்ற கருத்தை அவர்கள் ஏற்கின்றனர்.

ஆனால் நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் இந்தத் தடை முயற்சி முற்றிலுமாக துவம்சம் செய்துவிடும் என்பது மறுசாரார்களின் வாதமாக அமைந்துள்ளது.

### பிரிட்டனின் நிலை

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் விடயம் பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் மக்கெலம் றிவ்கைன்டின் சமீபத்திய ஸ்ரீலங்கா விஜயத்தை தொடர்ந்து மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை பிரிட்டனில் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கு இருந்த எதிர்பார்ப்புகள் அனைத்தையும் அவரது பேச்சு சிதறடித்து விட்டது.

''பிரிட்டிஷ் அரசு எப்போதும் அரசியல் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து வந்துள்ளது. ஸ்ரீ லங்கா அரசு விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்தாலும் விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை எமது அரசு கட்டுப்படுத்தாது'' என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

### தமிழ்க் கட்சிகள்

விடுதலைப்புலிகள் அமைப்பை எதிர்க்கும்தமிழ்க் கட்சிகள் அந்த அமைப்பை விரும்பாமல் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதற்கு எதிராகவே அக்கட்சிகளின் நிலைப்பாடு அமைந்துள்ளது.

புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது பற்றி தனது கட்சியின் அபிப்பிராயத்தை அரசாங்கம் கோரியதை உறுதிப்படுத்துகிறார்.

''விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்தாலும் தடை செய்யாவிட்டாலும் கள நிலைவரத்தில் மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை. எனவே அந்த அமைப்பைத் தடை செய்வதால் பயன் எதுவும் ஏற்படும் என நாங்கள் நினைக்கவில்லை. மேலும் அந்த அமைப்பைத் தடைசெய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அரசுக்கு சமாதானப் பேச்சுக்களில் அக்கறையில்லை என்ற கருத்தை உருவாக்குவதுடன் விடுலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்புக்கும் அதன் வெளிநாட்டு செயற்பாடுகளுக்கும் ஓரளவு உந்து சக்தியாக அமையும்'' என்று அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச்சேர்ந்த றவ்ஹக்கீம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்: ''விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இது ஒரு நோயின் குறியாக மாத்திரமே அமையும். ஆனால் இதனால் நோய் மாறாது. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அசையாத நம்பிக்கையாகும். விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தால் அவர்கள் வெளிநாடுகளில் இரகசியமாக இயங்குவார்கள்'' எனத்தெரிவித்தார்.

### கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்த யோசனைக்கு எதிர்ப்பைத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தால் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் மூடப்பட்டுவிடும் என கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசேப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதால் அந்த அமைப்பு தற்போது பெற்றுவரும் சர்வதேச உதவிகளை நிறுத்த முடியாது. அந்த அமைப்பு வெளிநாடுகளில் சொந்தமாகப் பணிமனைகளைக் கொண்டுள்ளதுடன் அப்பணிமனைகள் சிறப்பாகச் செயற்படுகின்றன. பிரித்தானியா, பிரான்ஸ், கனடா போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து பெற்றுவரும் ஆதரவையும், நிதியுதவிகளையும் அமைப்பைத் தடைவிதிப்பதன் மூலம் நிறுத்த முடியாது'' என ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

சமாதானத்திற்கான தேசிய சபையைச் சேர்ந்த ஜெகன் பெரேரா, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதைக்கண்டித்து ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

''விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதால் பலம் பொருந்திய அதன் இராணுவக் கட்டமைப்பை பலவீனப் படுத்தலாம் என அரசு நம்புகிறது. இது எதிரியிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்வதாக நினைக்கும் தீக்கோழி தனது தலையை மண்ணுக்குள் புதைப்பதற்கு ஒப்பானதாகும்.

1979 இல் அப்போதைய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பையும், அதையொத்த வேறு அமைப்புகளையும் இதே விதத்தில் கையாண்ட போதிலும் பிரச்சினைக்குரிய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கோ, சிவில் யுத்தத்திற்கோ முடிவு எதையும் காணமுடியவில்லை.

1983 இல் அரசாங்கம் அரசமைப்புச் சட்டத்துக்கு 6 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து பிரிவினைவாதக் கோரிக்கையைத் தடை செய்தது. ஆனால் அது கூட நிலைமையில், முன்னேற்றங்களை ஏற்படுத்தவில்லை. மாறாக நிலைமைகள் மோசமாகின.

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவமும் நாடாளுமன்றத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதன் மூலம் மீண்டுமொருமுறை விடுதலைப் புலிகளின் அபிலாஷையான சம உரிமையை அரசு மறுக்கிறது.

இதனால் இந்த நோக்கம் மேலும் வலுவடைய வாய்ப்பு ஏற்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தால் அவர்களின் செயற்பாடுகள் மேலும் தீவிரமடையலாம்.'' என அவர் கருத்து வெளியிட்டுள்ளார். ★

(நன்றி: தமிழ் ரைம்ஸ் செப். 1996)

> விடுதலைப் புலிகள் அமைப்பு ஸ்ரீலங்காவில் தடை செய்யப்படாத நிலையில் உலக நாடுகளில் அந்த அமைப்பின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் விடுத்த வேண்டுகோளை பல நாடுகள் நிராகரித்துள்ளன. அந்த அமைப்பைத் தடை செய்வதால் ஏற்படும் சாதக பாதகங்கள் பற்றி 'தமிழ் ரைம்ஸ்' இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

## நாடாளுமன்றம் முன்பாக
# சத்தியாக்கிரகம் செய்வது குறித்து தமிழ்க்கட்சிகள் ஆராய்வு

வவுனியா அகதி முகாம்களில் மக்கள் தடுத்து வைத்துள்ள விவகாரம் குறித்து அரசாங்கம் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிக்கு முன் சாதகமான தீர்வைக் காணாவிட்டால் நாடாளுமன்றத்துக்கு முன்பாகச் சத்தியாக்கிரகம் மேற்கொள்வது பற்றி தமிழ்க்கட்சிகளின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கடந்த வாரம் தமிழ்க் கட்சிகள் கூடி வவுனியா அகதி முகாம் மக்களின் நிலை குறித்து ஆராய்ந்த சமயம், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத தமிழ்க் கட்சிகள் மேற்கண்ட ஆலோசனையை முன்வைத்தன.

''சத்தியாக்கிரகம் நடத்த காலம் பிந்தி விட்டது. தற்சமயம் நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடியும் நிலையில் உள்ளது என்று புளொட் தலைவர் த. சித்தார்த்தன் கூறினார்.

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் மீண்டும் இவ்வாரம் கூடி ஆராயவிருக்கின்றன.

(இ-3-150)

# வவுனியா - புல்மோட்டை பாதை; கைப்பற்ற புலிகள் திட்டம்

திருகோணமலை, டிச. 18

வவுனியா – புல்மோட்டை பாதையைக் கைப்பற்றி வெலி ஓயாப் பகுதிக்கான தொடர்புகளைத் துண்டிப்பதே விடுதலைப் புலிகளின் நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெலிஓயாப் பகுதியில் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்வதற்கு வவுனியா — புல்மோட்டை வீதியையே பயன்படுத்தி வருகிறார்கள்.

வவுனியா — புல்மோட்டை வீதியில் உள்ள காவலரண்களை அழித்து அதை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர புலிகள் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதையடுத்து அப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(இ-3-150)

# மட்டக்களப்பு பாடசாலையில் குண்டு வெடிப்பு

கொழும்பு, டிச. 18

மட்டக்களப்பு மாவட்டம், பாவற்கொடிச் சேனைப்பகுதியில் பாடசாலை ஒன்றில் கடந்த சனிக்கிழமை குண்டு ஒன்று வெடித்தது.

இதைத்தொடர்ந்து அச்சம் காரணமாக அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து நாவற்குடா பகுதிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3-150]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர் (இறைச்சிக் கோழி) சுத்தம் செய்து உடன் பெற்றுக் கொள்ளலாம். V K. M. பாம், கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணம். (44159)

வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 353/2, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (44162)

வீட்டுத் தளபாடங்கள், கடை சோக்கேஸ், ரியூட்டறி மேசைகள், எவர் சில்வர், மரப் பெட்டகங்கள், ஹீரோ, லுமாலா சைக்கிள்கள், C.90 சுப்பர் கப் (கழுத்துத் திறப்பு). இரும்புப் பெட்டி, தையல் மெசின் ஆகியன விற்பனைக்குண்டு. க. கோபால், ஜும்மா பள்ளி வாசல் லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (44182)

### தவறிவிட்டது

பழனிவேற்பிள்ளை சுதர்ஷன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை 15 - 12 - 96 ஆம் திகதியில் யாழ். அம்மன் வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். இல. 186/14 பருத்தித்துறை வீதி, குருநாதசுவாமி கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [44178]

### Spoken English

சுலபமான முறையில் ஆங்கிலம் எழுத வாசிக்க கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, மே/பா இல: 426, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி). (44160)

### மணமகன் தேவை

மெதடிஸ்த, கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஏக புதல்விக்கு பெற்றோர் 30 வயதுக்கு உட்பட்ட தகுதியான மெதடிஸ்த, கத்தோலிக்க மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: சேவை ''நம்பகம்'', விவாக சேவை, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் சமீபமாக). (44164)

### கைமாறிவிட்டது

பெறுமதிமிக்க உடுப்புகள், மருந்துகள், வேறுசில பொருள்களடங்கிய பெரிய பிரயாணப் பை 16 - 12 - 96 இல் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்சில் கைமாறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொறுப்பதிகாரி, யாழ். பஸ்நிலையம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (44177)

**C. S. A.**
**புதிய பிரிவு**
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்:
**21 - 12 - 96**
புதிய நேரம் 2 மணி
Diploma in
Data Processing
And
Basic Programming
**COMPUTER SCIENCE ACADEMY**
Navalady Lane,
Thirunelveli.
(சி/3735)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 15 — 12 — 1914

மறைவு: 18 — 11 — 1996

அமரர்
### கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்

எங்கள் பாசமிகு ஐயாவே!
நீங்கள் எம்மை விட்டு ஓடியதேன்?
கடைசி நேரத்தில் கடமை செய்யாமல்
எம் இதயம் வாடுதையா!
எம்மை மறந்து போனதேன் ஐயா!
முப்பத்தொரு நாள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது எந்நாளும்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியையில் பங்களிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

சிலேசியார் கோயிலடி,
சங்கானை.
(9083)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்: **03 - 03 - 1928**

மறைவு: **02 - 01 - 1993**

**திதி:- 18 - 12 - 1996**

அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த - எங்கள்
அன்பு அப்பாவே!
நீங்கள் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு – எங்கு
சென்று விட்டீர்கள்......
ஆண்டுகள் நான்கு சென்றாலும் உங்கள்
நினைவுகள் - எங்கள்
இதயத்தை என்றும் விட்டகலா.

சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

கண்டி வீதி,
கொடிகாமம்.
(9081)

## மனித உரிமை ஆணைக்குழுவில் தமிழருக்கும் இடம் வேண்டும்

### ஈ.பி.டி.பி., புளொட் கோரிக்கை

கொழும்பு, டிச. 18

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று ஈ. பி. டி.பியும், புளொட்டும் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக இரு அமைப்புக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு நடத்தவுள்ளதாக ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த ஜூலையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஓகஸ்ட் மாதம் சபாநாயகரால் அங்கீகாரம் பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களாக 5 பேரை தெரிவு செய்வது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் கருத்து கோரப்பட்டுள்ளதாக அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## ராணுவ தலைமை அதிகாரியாக சோமதாஸ

தற்சமயம் தொண்டர் சேவைத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சோமதாஸ ஹப்புகாராட்சி இராணுவத் தலைமை அதிகாரியாக நியமனம் பெறுகிறார்.

தொண்டர் சேவைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜாலிய நம்முனி நியமனம் பெறுகிறார்.

வவுனியா செட்டிகுளம் 8 ஆவது பிரிக்கேட் தளபதியாக பிரிகேடியர் சாலிக குலதுங்க நியமனம் பெறுகிறார்.

இந்த மாற்றங்கள் அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வர இருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## நியாய விலையில் பாதணிகள்

**ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்குரிய**
**Bata, DSI பாதணிகள் பெற்றுக்கொள்ள**

### வண்ணக் காலணிப் பூங்கா

கண்டி றோட், சாவகச்சேரி.

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(44181)

எமது வாடிக்கையாளர்களுக்கு
## முக்கிய அறிவித்தல்

**நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு**
எமது ஸ்தாபனம் தற்காலிகமாக

### லைடன் புடைவை நிலையம்

**இல. 27, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி**

என்னும் இடத்தில் **31-12-96** வரைக்கும் இயங்கும்.

**01 - 01 - 1997** இல் இருந்து எமது ஸ்தாபனம்

**இல. 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சுவாட்ஸ் லேன் வரும் பாதை:

★ கண்டி றோட் ஆசீர்வாதம் அச்சகத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கை.

★ ஆச்சிரமத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கையாலும் வரலாம்.

(சி/3742)

## UNIVERSITY CHRISTIAN STUDENTS CENTRE

### பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம்

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்களின்

**“அன்பின் சங்கமம்”**

**கிறிஸ்து பிறப்பு இசை வழிபாடு**

நாளை (19 - 12 - 96) வியாழக்கிழமை மாலை 3-00 (S.L.T.) மணிக்கு பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

★ நேரமாற்றத்தைக் கவனிக்கவும்.
தனிப்பட்ட அழைப்பிதழில் நேரம் 4 மணி என குறிப்பிடப்பட்டிருந்தது.

கிறிஸ்தவ மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.
(44179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# பொறுப்புடன் கடமையாற்றுக; அல்லது 23க்கு முன் ஒய்வுபெறுக!

## அரச ஊழியர்களுக்கு சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு, டிச. 18

''தற்போதைய சூழ்நிலையில் குறைந்தது அடுத்த இரண்டு வருடங்களுக்காவது எவ்வித தயக்கமும் இன்றி அரசாங்க ஊழியர்கள் தியாக சிந்தையுடனும், பொறுப்புணர்வுடனும் கடமைகளைச் செய்ய தங்களை அர்ப்பணிக்க வேண்டும். அதற்கு இணங்காதவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதவியில் இருந்து ஒய்வு பெற்றுச் செல்லலாம்''

அரசாங்க ஊழியர்களுக்கான காப்புறுதித் திட்டத்தைக் கடந்த திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது அரசாங்கம் அரச ஊழியர்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. அதன் ஒரு முக்கிய கட்டமாகவே இந்த இலவச காப்புறுதித் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சிலர் அரசாங்க சேவைக்கே களங்கத்தை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு செயற்படுபவர்களை நான் வெறுக்கின்றேன். இவர்களை பதவியில் இருந்து வெளியேற்றவும் தயங்கமாட்டேன்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்களின் சேவை நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியமாகும்.

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-3)

## சுண்டிக்குளம் பகுதியில் சடலங்கள்

கொழும்பு, டிச. 18

சுண்டிக்குளம் கடற்பகுதியில் மேலும் இரு சடலங்கள் கரை ஒதுங்கின.

இவை தமிழ் இளைஞர்களின் சடலங்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டதாக கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த அரச அதிகாரிகள் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது. (இ-3)

## சர்வதேச ஊனமுற்றோர் தினம்

வலிகாமம் தெற்கு, டிச. 18

சர்வதேச உடல் ஊனமுற்றோர் தினத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினர் ஒழுங்கு செய்துள்ள விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இராமநாதன் கல்லூரியில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதனையொட்டி இப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட உள்ளன. (இ-152)

## துப்பாக்கி சூட்டில் இறந்த இளைஞன்

தற்செயலாக இடம் பெற்ற துப்பாக்கி வெடிச் சம்பவத்தில் மரணமானதாக ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை சுரேஷ்குமார் (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (இ-15)

## தூத்துக்குடி- கொழும்பு சேவை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

கொழும்பு, டிச. 18

தூத்துக்குடியில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வரும் ''வத்தை'' கள் மற்றும் படகுகள் கொழும்புத் துறைமுகத்தில் நுழைய இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்குமாறு இந்தியா இலங்கையிடம் கேட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் வள்ளமோட்டிகள் இந்திய அரசுக்குக் கொடுத்த மனுவை அடுத்து கொழும்பில் உள்ள இந்திய தூதர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் கடந்த புதன்கிழமை பேச்சுக்கள் நடத்தினார்:

இந்தச் சேவை தொடரத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்தியத் தூதுவர் அமைச்சர் கதிர்காமரிடம் கேட்டுக் கொண்டார். (இ-3-150)

## நாட்டிலுள்ள பாடசாலைகளை வகைப்படுத்த நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, டிச. 18

இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணங்களின் ஏற்பாட்டின் படி தேசிய ரீதியில் ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தவும் —

அதற்கேற்ப நாட்டிலுள்ள பாடசாலைகளை வகைப்படுத்தவும் — கல்வி உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைவாகப் பாடசாலைகள் பற்றிய புள்ளிவிவரங்களை கோட்ட ரீதியாக அமைச்சு திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளில் உள்ள வசதிகள், சென்றடைவதற்கான வசதிகள், இடருறு நிலைமைகள், பொது விதிகள், சமூக சுற்றாடல் என்ற தொடர்பில் புள்ளிகள் வழங்கப்பட்டு பாடசாலைகள் நான்கு தரங்களாக வகுக்கப்பட உள்ளன.

இதன்படி பாடசாலைகள் பெறும் புள்ளிகளடிப்படையில் 36 க்கும் 50 க்கும் இடையிலான புள்ளிகளைப் பெறுபவை உவப்பற்ற பாடசாலைகள் எனவும் —

51 புள்ளிக்கு மேல் பெறுபவை கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் எனவும் — வகுக்கப்படும்.

20 புள்ளிகள் வரை பெறுபவை மிக உவப்பான பாடசாலைகளாகவும்; 21 முதல் 35 வரை புள்ளிகள் பெறுபவை உவப்பான பாடசாலைகள் எனவும் கொள்ளப்படும்.

கஷ்டப் பிரதேச படி வழங்கல் நடவடிக்கையின் போது 51 முதல் 65 வரை புள்ளி பெறும் பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் —

66 க்கு மேலாகப் புள்ளி பெறும் பாடசாலைகள் அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் — கொள்ளப்படும்.

அதி கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 15 சத வீதமும், கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 10 சத வீதமும் அவர்களது ஒன்றிணைந்த வேதனத்தில் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவாக எதிர்காலத்தில் வழங்கப்படும். [இ-152]

## கருணாநிதியை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினை பற்றி கலந்துரையாடினார்.

தமிழக பிரபல பத்திரிகையாளர் சோவின் மகனின் திருமணத்தில் கலந்து கொண்ட தமிழக முதல்வருக்கு டக்ளஸ் தேவானந்தாவை சோ அறிமுகம் செய்து வைத்தார்.

இருவருக்கும் இடையில் நீண்ட நேரம் நடந்த கலந்துரையாடலில் தமிழர் படும் இன்னல்கள், கஷ்டங்கள் குறித்து டக்ளஸ் தேவானந்தா அவருக்குத் தெரிவித்தார். (இ-3-150)

## நாளை

**மார்கழி 4**

**வியாழக்கிழமை**

**திதி:** தசமி பின் இரவு 3.03 வரை.

**நட்சத்திரம்:** ரேவதி முன் இரவு 7.35 வரை.

**ராகுகாலம்:** 1.54 - 3.24

**சுபநேரம்:** 7.54 - 9.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயன்

### இன்னமும் முடக் கழுதையா?

வெளிமாவட்ட மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் கடந்த ஒன்றரை மாதங்களாகக் குடாநாட்டுக்கு வரவில்லை. கொழும்பில் தேங்கிக் கிடந்த 200 தபால் பொதிகளும், காங்கேசன் துறைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே வந்து சேர்ந்த போதிலும், இன்னும் கப்பலில் இருந்து இறக்கப்படவில்லை. அவை எப்போது இறக்கப்படும், தபால்கள் எப்போது விநியோகிக்கப்படும் என்பது எவருக்கும் தெரியாது!

காங்கேசன்துறையில் கப்பலில் கிடந்து கடலைப் பார்க்கும் கடிதப்பொதிகளில் மிகப் பெரும்பாலானவை, வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டு மக்களுக்கு அனுப்பப்பட்டவை. அவற்றை அனுப்பியவர்கள், தமது குடும்பத்தினருக்கு, உறவினருக்கு அனுப்பிய அக்கடிதங்கள் உரியவர்களைச் சென்றடைத்திருக்கும்; அவற்றுக்குப் பதில்கள் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

கடந்த ஆறு வருடங்களாகக் குடாநாட்டில் தபாற் சேவை மட்டுமன்றி, ஏனைய சகல அத்தியாவசிய சேவைகளும் முழு அளவில் சீராக நடைபெறவில்லை என்பது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தெரியாத செய்தி அல்ல.

ஆனால் இப்போதும் அந்த நிலையே தொடர்கிறது. சிவில் நிர்வாகம் இன்னமும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முடக் கழுதையாகவே, எழுந்து நிற்க முடியாது கிடக்கிறது என்று அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள்; அவ்வாறு எதிர்பார்க்க நியாயமுமில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது சுமார் நாலே கால் லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவ்வருடம் மே மாதம் தொடக்கம் குடாநாடு அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதால் சிவில் நிர்வாகம் சீராக நடப்பதாகவே வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நினைப்பார்கள்.

எனவே முன்னரைப் போலவே, மக்களின் மிக முக்கிய தொடர்புச் சேவையான தபாற் சேவை நொண்டிக் குதிரையாகத் தடக்கி விழும் என்றோ, தபால்கள் கடலில் கிடந்து கலங்கும் என்றோ அவர்கள் எண்ண மாட்டார்கள்!

தபால்கள், தந்திகள் விரைவாக உடனுக்குடன் ஆகக் குறைந்த தாமதத்துடன் விநியோகிக்கப்பட வேண்டியவை. தொலைபேசி வசதி எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. அதற்கான பணவசதியும், நேரவசதியும் சகல தரப்பு மக்களிடமும் இருக்காது.

இத்தகைய பின்னணியில் தபாற் சேவை எவ்வளவு முக்கியமானது என்பதனை அரசாங்கமோ, பொறுப்பான அதிகாரிகளோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. உணவு, மருந்துப் பொருள்களை அடுத்து முன்னுரிமை கொடுக்க வேண்டிய சேவைகளில் தபாற் சேவையும் ஒன்று.

இந்த முக்கியத்துவத்தை அறிந்து, உணர்ந்து அரசும் அதன் நிர்வாக இயந்திரமும் எப்போது உரிய முறையில் செயற்படப் போகின்றன?

இத்தகைய விடயங்களிலேயே சுளுக்கும், முறிவும் இருந்தால், குடாநாட்டில் அரசின் சிவில் நிர்வாகம் செவ்வனே நடைபெறுகின்றது என்று எவ்வாறு சொல்வது?

## வாசகர் திருமுகம்

### புதிய பாடத்திட்டம் எது?

1997 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ உயர்தர மாணவர்களான எமக்குப் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். ஆனால் அந்தப் பாடத்திட்டம் யாது என்று மாணவர்களுக்குத் தெரியாது.

அது ஒரு புறமிருக்க, புதிய பாடத்திட்டத்துக்கமைய மாதிரிப் பரீட்சை வினாத்தாள் எவ்வமைப்பில் வினாக்கள் அமைந்துள்ளன என்று மாணவருக்கோ ஆசிரியருக்கோ தெரியாது. மற்றும் புதிய பாடமாகிய வணிகப் புள்ளிவிவரவியல் என்ற பாடமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் வினா அமைப்பு என்ன என்ற நிலையும் உருவாகி உள்ளது. ஆனால் இதனை ஒருவரும் கண்டும் காணாமல் உள்ளனர்.

இதற்குரிய நடவடிக்கைகளை பாடசாலை அதிபர்களோ கல்வி அதிகாரிகளோ எடுப்பதாகத் தெரியவில்லை. இதனைக் கருத்திற் கொள்ளாது இப்படியே விட்டால் எமது கல்வி எவ்வளவு பாதிப்படையும்?

1997 ஒகஸ்டில் பரீட்சை முடிந்த பின்னர் தான் வினாக் கட்டமைப்புத் தெரியுமா? இது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது போல ஆகிவிடும்!

ஆகவே, இதனை உரியவர்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு மாதிரி வினாத்தாளைப் பெற்று மாணவரின் கல்வியில் உதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**வை. தயாளன்**

பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

### கால்நடை உணவுத் தட்டுப்பாடு

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தவிடு, பிண்ணாக்கு, கறவைப்பசு உணவு, கோழித்தீன் போன்றவற்றைத் தரைவழிப் பாதையால் கொண்டுவர முடியாமற்போயிற்று. எனினும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கால் நடை உணவுகளைத் தயாரித்து கால்நடைவளர்ப்போருக்கு நியாயவிலையில் வழங்கி வந்துள்ளார்கள்.

1995 ஒக்ரோபரில் இடம் பெயர்ந்து மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னரும் மிகவும் குறைந்த விலையில் தவிடு (கிலோ 5 ரூபா) கறவை உணவு (கிலோ 15 ரூபா) வழங்கி கால் நடைகளையும், கால்நடை வளர்ப்போரையும் காப்பாற்றினார்கள். இதன் மூலம் இராணுவ நடவடிக்கைக்குப் பின் எஞ்சிய கறவைகளை வளர்க்கவும் உதவினார்கள்.

ஆனால் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக, கால்நடை உணவு கேட்டால் இல்லை என்கின்றார்கள். கொழும்பு சென்று மூலப்பொருள்கள் கொள்வனவு செய்து வர வங்கி ஆணை பெற முடியவில்லை; போதிய கப்பல் இட ஒதுக்கீடு கிடைக்கவில்லை; என்று காரணங்கள் கூறுகிறார்கள்.

ஒரு கிலோ தவிடு பெறமுடியாத இந்தக் கால கட்டத்தில் இச்சங்கம் கால்நடை வளர்ப்போரை நட்டாற்றில் விடலாமா? பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கவனம் செலுத்தும் கூட்டுறவுத்திணைக்களம் ஏன் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கவனம் செலுத்தவில்லை? கால்நடை தானே என்று கை விட்டுவிட்டார்களா?

அரச அதிபர் கூட்டுறவுத்துறை அதிகாரிகளின் தூக்கத்தைக் கலைப்பாரா? என் போன்ற கால்நடை வளர்ப்போரின் கஷ்டங்கள் தீர வழி செய்வாரா? எஞ்சியிருக்கும் கால்நடைகளும் மேசைக்குப் போகாமல் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பது யார் பொறுப்பு?

**க. கணேசரத்தினம்.**

உடுவில் கிழக்கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# படையினர் வரும்போது புலிகள் அகல்வதும் பின்பு திரும்பி வருவதும் கிழக்கில் சகஜம்

## கிழக்கு நிலைமை குறித்து இராணுவச் செய்தியாளர்

கொழும்பு, டிச. 18

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து அகல்வதும் பின்னர் இராணுவத்தினர் சென்றதும் அவர்கள் மீண்டும் தமது பகுதிகளுக்குத் திரும்பி வருவதும் வழக்கம். கடந்த இரண்டு வருடகாலத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள் இவ்வாறு நடந்துள்ளது.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் இராணுவச் செய்தியாளர் பி. பி. சியின் சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை புளுக்குனாவ அதிரடிப்படை முகாம் மீது மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மட்டக்களப்புக்கு மேற்கே ''பாடும் மீன்'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் அல்லவா?

இது குறித்து சண்டே ரைம்ஸ் இராணுவச் செய்தியாளர் மேலும் தெரிவித்ததாவது:-

புளுக்குனாவ அதிரடிப் படை முகாம் மீதான தாக்குதல் காரணமாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தேடுதல் வேட்டை நடத்துவதற்காக ''பாடும் மீன்'' என்னும் பெயரில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காட்டுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன. புளுக்குனாவ முகாமிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட டிராக்டர் மற்றும் சில ஆயுதங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் இராணுவம் ஒரு முகாமிலிருந்து கைப்பற்றியுள்ளது.

பாடும் மீன் நடவடிக்கை காரணமாக காட்டுப் பகுதிகளில் அமைந்துள்ள சில முகாம்களை விடுதலைப் புலிகள் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு இராணுவ முகாமில் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டில் பங்கு பற்றிய பின்னர் மீண்டும் பொலீஸ் விசேட இடுபணிப் படை முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டென்ட் உபாலி சஹபந்து கொல்லப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இராணுவத்தின் கை ஓங்கியிருக்கவில்லை என்றே தெரிகிறது. இதற்குக் காரணம் குறிப்பாக சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னர் இராணுவத்தில் பெரும்பாலானோர் வட பகுதிக்கு அனுப்பப்பட்டது தான்.

இப்படியான நிலையில் தற்போது கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால், விடுதலைப் புலிகளை அவர்களது முகாம்களிலிருந்து விரட்ட முடியும். ஆனால் மீண்டும் அவர்கள் தங்களது முகாம்களுக்குத் திரும்பி வருகிறார்கள்

அந்தப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றி நிர்வாகத்தை நிலைநாட்டும் வரை தொடர்ந்தும் இந்த நிலையே தொடரும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-10)

### களுவாஞ்சிக்குடி ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலியான பொலீஸ் சுப்பிரிண்டென்ட் மட்டுமே ஜீப் வண்டியில் பயணம் செய்தார் எனச் சொல்லப்படுகிறது.

இவர் களுவாஞ்சிக்குடியில் இருந்து ஜீப் வண்டியில் தனியாகப் புறப்பட்ட சிறிது நேரத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஆளானார் என்றும் அறியப்படுகிறது.

கடந்த புதன்கிழமை புளுக்குனாவவில் புலிகள் அதிரடிப் படை முகாமைத் தாக்கி அழித்த பின்னர் —

இராணுவத்தினர் ஆரம்பித்த ''பாடும் மீன்'' விசேட இராணுவ நடவடிக்கையில் —

பொலீஸ்சுப்பிரிண்டன் சஹபந்து தீவிர பங்கு வகித்தார் என்று பாதுகாப்புப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

### கிழக்கில் ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் —

கொக்கட்டிச்சோலையில் விடுதலைப் புலிகளின் பொலீஸ் நிலையம் ஒன்றும் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் —

கொக்கட்டிச் சோலை நகரில் படையினர் அண்மித்த போது பெண்களும், சிறுவர்களுமே அங்கு இருக்கக் காணப்பட்டனர் என்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ- 3)

(முன்வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

### காங்கேசன் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே சமயம் இன்று தாரகி, நரோமா, எண்டூரன்ஸ் ஆகிய 3 கப்பல்களும் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு வருமென்றும் —

காலநிலை பொருத்தமானதாக இருந்தால் அக்கப்பல்கள் பயணிகளை திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லுமென்றும் யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-5)

### மனித உரிமை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துமாறு எமது கட்சி கேட்கிறது —

சிவில் நிர்வாகம் உருவாக்கப்படாத பட்சத்தில் மனித உரிமை மீறல்கள், காணாமற் போவது ஆகியன தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் — என்றும் அவர் கூறினார்.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது குறித்துப் பிரஸ்தாபிக்கையில் —

வடக்கு – கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசர காலத்தையும், பாதுகாப்பையும் காட்டி அரசு தேர்தலை ஒத்திப் போடுகிறது. ஆனால் முழு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தலை நடத்துவது என்றால், முழுமையான தேர்தலை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இராணுவக் கட்டுப்பாடு உள்ள இடத்தில் எப்படி அரசியல் கட்சிகள் இயங்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்?

இதனாலேயே அந்தத் தேர்தலை நடத்த வேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது — என்றார்.

(அ-3-10)

### திருகோணமலை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைககு இந்தக் கடைகள் வழங்கப்பட்டதால் கடை நடத்துவோர் குறைந்தளவு வாடகையையே செலுத்த வேண்டியிருந்தது.

ஆனால் இம்முறை கூடுதல் தொகைக்கு குத்தகை பெறப்பட்டதால் கூடுதல் வாடகை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் குத்தகை விடயத்தில் மோசடி இடம் பெற்றிருப்பதாகக் கூறி அதைக் கண்டித்தே நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சுவரொட்டிகளை ஒட்டியும், பதாகைகளைத் தாங்கியும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த விடயம் குறித்து வர்த்தகர்களின் தூதுக்குழு ஒன்று திருமலை மாநகர சபை மேயர் சூரியமூர்த்தியுடன் பேச்சு நடத்தியது.

அதன்பின் அவராதுகொடும்பாவியை அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். (இ-3-150)

## பிரபாகரன் ஒரு கெரில்லா வீரர் இதனை ஏற்கத்தான் வேண்டும்

### அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, டிச. 18

'எது எப்படி இருந்தாலும் பிரபாகரன் உண்மையான ஒரு கெரில்லா வீரர் என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும்'

களுத்துறை நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடந்த ஐ. தே. கவின் 42 ஆவது வருடாந்த மாநாட்டில் பேசுகையில் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த பின்னர் தான் உண்மையான கெரில்லா யுத்தம் நடைபெறுகிறது.

இன்றைய அரசு பொய்ப் பிரசாரம் செய்தே பதவிக்கு வந்தது. பல எதிர்பார்ப்புக்களுடன் மக்கள் இன்றைய ஆட்சியை பதவியில் இருத்தினர். இறுதியில் மக்கள் அனைத்திலுமே ஏமாற்றம் அடைந்தனர்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## மனித உரிமை மீறல்களுக்கு தமிழர் ஆளாகின்றார்கள்!

### ஜெபதேவ உயன்கொட கவலை தெரிவிப்பு

கொழும்பு, டிச. 18

இன்று தமிழ் மக்கள் பெருமளவில் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகின்றார்கள்.

இலங்கையன்ற மனித உரிமைகள் நிலையத் தலைவர் கலாநிதி ஜெயதேவ உயன்கொட மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்ற மனித உரிமைகள் தின வைபவத்தில் தலைமையுரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமிழ் மக்கள் மனிதஉரிமை மீறலுக்கு ஆளாகின்றமை பாரிய பிளவினைக் கொண்டு வரும் அரசியல் விவகாரம்.

சோல்பரி அரசியல் அமைப்பில் மனித உரிமைகளுக்கெனத் தனியான பகுதியொன்று விரிவாக இருந்திருந்தால் கடந்தகால கறைகளில் இருந்து நாம் தப்பியிருக்கலாம்.

இந்த அனுபவத்தைக் கொண்டு நாம் சிறந்த முறையில் மனித உரிமைகளைப் பேணுவதே இன்றைய தேவையாகும் —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

### திருமலையில் படையினர் சூடு; மீனவர் காயம்

திருகோணமலை, டிச. 18

திருகோணமலை கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீன் பிடிப் படகு ஒன்றின் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பாலகிருஷ்ணன் என்னும் 65வயது மீனவர் காயமடைந்தார்.

இவர் திருமலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[இ-3]

### சிப்பாய்களை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவுடம் —

இயன்றளவு விரைவாக விஜயம் செய்து போர்க் கைதிகளை விடுவிக்க முயற்சிக்கப் போவதாகவும் — அவர் தெரிவித்தார்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கை தொடர்வதால் [illegible] அவர் கூறினார். (இ-3)

### கிருஷாந்தி வழக்கு

கொழும்பு, டிச. 18

கைதடி மாணவி கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், தம்பி, அயலவர் கொலை தொடர்பான வழக்கில் எதிரிகளான 9 இராணுவத்தினரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்ற பதில் நீதிவான் கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இந்த வழக்குத் தொடர்பாக இரு பொலீஸார் உட்பட பதினொரு பேர் கைதானதும் —

அவர்களில் பொலீஸார் இருவரும் அரசதரப்பு சாட்சிகளாக மாறியதும் தெரிந்தவையே. (இ-3)

### பங்கீட்டுக்கு 6 லீற்றர் மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், டிச. 18

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 6 லீற்றர் மண்எண்ணெய் வழங்கிவருகிறது.

### குருப்பட்டம் நீக்க உத்தரவில் பாப்பரசர் ஒப்பம்

கொழும்பு, டிச. 18

மனித உரிமைகள் அமைப்புப் பிரமுகரான வண. திஸ்ஸ பால சூரியாவை குருவானவர் பதவியில் இருந்து நீக்கும் உத்தரவில் பாப்பரசர் கையொப்பமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அன்னை மரியாளை நவீன உலகத் தாய்மாருடன் ஒப்பிட்டு கட்டுரை எழுதி இறையியல் தவறு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவரது குருவானவர் பதவியை நீக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி அவர் அப்பீல் செய்துள்ளார். (இ-3-150)

## மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 29 [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org